ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2025 ஓகத்து 15

# இலங்கை மத்திய வங்கி நாணயக் கொள்கை அறிக்கை 2025 ஓகத்தினை வெளியிடுகின்றது

மத்திய வங்கி 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2025இற்கான அதன் இரண்டாவது நாணயக் கொள்கை அறிக்கையினை வெளியிட்டது. ஆண்டொன்றிற்கு இருமுறை வெளியிடப்படுகின்ற நாணயக் கொள்கை அறிக்கையானது பொருளாதாரம், குறிப்பாக பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சித் தோற்றப்பாடு, தொடர்பிலான முன்னோக்கிய பார்வையிலமைந்த நுண்ணோக்குகள் மற்றும் எறிவுகளிற்கான இடர்நேர்வுகளை வழங்குகின்றது. இவ்வறிக்கையின் ஊடாக மத்திய வங்கி அதன் அண்மைய நாணயக் கொள்கைத் தீர்மானங்களிற்குப் பின்னணியிலுள்ள நியாயபூர்வதன்மையினைத் தொடர்பூட்டுவதன் மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறுந்தன்மை என்பவற்றினை மேம்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது.

இந்த அறிக்கையின் உள்ளடக்கமானது 2025 யூலை மாத நாணயக் கொள்கை மீளாய்வின் போது தீர்மானத்தினை உருவாக்குவதில் நாணயக் கொள்கைச் சபையினால் பரிசீலனையிற்கொள்ளப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

**முக்கிய பண்புகள்**

- மெதுவடைந்த கேள்வியினால் உந்தப்பட்ட பணவீக்க அழுத்தங்களினைக் கருத்திற்கொண்டு மத்திய வங்கி அதன் தளர்வடைந்த நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைத் தொடர்ந்தது.
- 2024 செத்தெம்பரிலிருந்து பதிவுசெய்யப்பட்ட பணச்சுருக்கமானது 2025இன் மூன்றாம் காலாண்டளவில் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.
- மேம்படுகின்ற கேள்வி நிலைமைகளுடன் பணவீக்கமானது 2026இன் நடுப்பகுதியளவில் 5 சதவீத இலக்கினை எட்டுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது.
- மையப் பணவீக்கமானது படிப்படியாக அதிகரித்து, முதன்மைப் பணவீக்க இலக்குடன் இசைந்து செல்லும் விதத்தில் அதன்பின்னர் உறுதிநிலைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.
- பொருளாதாரமானது 2025இல் ஏறத்தாழ 4.5 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.
- வளர்ச்சியடைந்து வருகின்ற உலகளாவிய நிச்சயமற்றதன்மைகள் பொருளாதார வளர்ச்சி வாய்ப்புக்களிற்குச் சவால்களைத் தோற்றுவிக்கின்றன.

*இணையவழி வெளியீடொன்றாகக் காணப்படுகின்ற நாணயக் கொள்கை அறிக்கையானது நாணயக் கொள்கை அறிக்கை | Central Bank of Sri Lanka எனும் மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் கிடைப்பனவாகவுள்ளது.*